பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள். .01.2021

**<u>நிகழும் திருவள்ளுவராண்டு ஜனவரி மாதம் 29ம் நாள் ( 29.01.2021) காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற உள்ள சாதாரண கூட்டப் பொருள்கள்</u>**

| | |
|---|---|
| பொருள்.1 | பரமக்குடி நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜனவரி 2021ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br><br>**தீர்மானம் எண்.1328, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.2 | பரமக்குடி நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜனவரி 2021ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br><br>**தீர்மானம் எண்.1329, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.3 | பரமக்குடி நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் ஜனவரி 2021ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br><br>**தீர்மானம் எண்.1330, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.4 | பரமக்குடி நகராட்சி சுகாதார அலுவலர் அவர்களின் ஜனவரி 2021ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br><br>**தீர்மானம் எண்.1331, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.5 | இந்நகராட்சி அலுவலகத்திற்கு அலுவலக பணிக்காக அவசர, அவசிய தேவைக்காக ஸ்கேனருடன் கூடிய பிரிண்டர் கொள்முதல் செய்வதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டுள்ளவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. |

| வ.எண் | நிறுவனத்தில் பெயர் | ஜீலை |
|---|---|---|
| 1. | Systems Computer Sales & Services, Madurai. | 25000/– |
| 2. | Kalasm Techno Service, Madurai | 27500/– |

மேற்கண்ட விலைப்புள்ளி பட்டியலில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள Systems Computer Sales & Services, Madurai.என்ற நிறுவனத்திடம் பிரிண்டரை கொள்முதல்

| | |
|---|---|
| | செய்வதற்கும், அதற்குரிய தொகை வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்கண்ட தொகையினை பொது நிதியிலிருந்து வழங்கவும் அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.1332, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.6 | பரமக்குடி நராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சமீபத்தில் பெய்து வந்த வடகிழக்கு பருவமழையின் காரணமாக நகரின் தாழ்வான பகுதிகளில் மழைநீர் குளம் போல தேங்கி பொது மக்களின் போக்குவரத்திற்கு மிகுந்த இடையூறு ஏற்படுகிறது. மேலும் பொது மக்களின் சுகாதாரம் பாதிக்கும் சூழ்நிலை உள்ளது. இந்நிலையில் நகரின் முக்கியப்பகுதியான இரயில்வே பீடர் சாலையின் மேற்கு குறுக்கு தெருக்களில் அதிகமாக மழைநீர் தேங்கி போக்குவரத்திற்கு சிரமமாக உள்ளது. எனவே மேற்படி பகுதி வாழ் பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு மேற்காணும் குறுக்குத் தெருக்களில் மழைநீர் வடிகால் மற்றும் தார்சாலை அமைக்க ஆணையாளர் நேரடி ஆய்வில் தெரிவித்ததைத் தொடர்ந்து மேற்படி பகுதிகளில் சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்க கீழ்க்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.<br>1. இரயில்வே பீடர் சாலை மேற்கு 1வது குறுக்குத்தெருவில் தார் சாலை மற்றும் மழைநீர் வடிகால் கட்டுதல் ரூ.10.00 இலட்சம்<br>2. இரயில்வே பீடர் சாலை மேற்கு 2வது குறுக்குத்தெருவில் தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் கட்டுதல் ரூ.10.00 இலட்சம்<br>மேற்காணும் விபரப்படி தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட பணிகளுக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.1333, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.7 | பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட எமனேஸ்வரம் பகுதியில் உள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் மேற்கு பக்க கட்டிடத்தின் முதல் மாடியில் உள்ள கூடுதல் வகுப்பறைக் கட்டிடத்திற்கு பெயிண்டிங் மற்றும் வயரிங் பணிகள் மேற்கொண்டு மேற்படி வகுப்பறைக்கட்டிடத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வர பள்ளி தலைமையாசிரியர் அறிவுறுத்தியதின் பேரில் மேற்படி கூடுதல் வகுப்பறைக் கட்டிடத்திற்கு பெயிண்டிங் மற்றும் வயரிங் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.2.25 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு –</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம், மேற்படி பணியினை நகராட்சி கல்வி நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.1334, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.8 | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள ஈப்பு வாகனத்தின் 4 (நான்கு) டயர்கள் ஏற்கனவே 24.12.2018ல் வாங்கப்பட்டு மொத்தம் ரூ.93,000கி.மீ தூரம் ஓடி மிகவும் தேய்ந்த நிலையில் உள்ள டயர்களை உடனடியாக மாற்ற வேண்டியுள்ளதால் தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 18.01.2021ந்தேதி உள்ளூர் நிறுவனங்களில் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்களில் இருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br>1 \| M/s . அமிர்தா டயர்ஸ், பரமக்குடி. \| ரூ.26100–<br>2 \| M/s . ரத்னா டயர்ஸ், பரமக்குடி. \| ரூ.26800–<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் M/s . அமிர்தா டயர்ஸ், பரமக்குடி கொடுத்துள்ள விலைப்புள்ளி விலை விகிதம் குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம். |

மேலும் அவசரம் அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும், பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1335, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.9

பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2020–2021ன் கீழ் பரமக்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.நி.சதன்பிரபாகர் அவர்கள் பரிந்துரையின் பேரில் மாவட்ட ஆட்சித் தலைவர் இராமநாதபுரம் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.ஆர்4/3197/2020 நாள் 08.12.2020ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் பரமக்குடி நகராட்சி 2வது வார்டு காந்தி நகரில் சமுதாய கூடத்திற்கு மேல் கூரை அமைக்கும் பணிக்கும் ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் செய்ய 30.12.2020 அன்று முதன் முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுதொகையைவிட கூடுதல்/ குறைவு |
|---|---|---|
| 1. | திரு. பி.கோவிந்தன் ஒப்பந்ததாரர், பரமக்குடி | 0.28% மதிப்பீட்டு விலையை விட குறைவு |
| 2. | திரு.எம்.சங்கர் ஒப்பந்ததாரர், பரமக்குடி | 0.08% மதிப்பீட்டு விலையை விட கூடுதல் |

**அலுவலகக்குறிப்பு**

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.28% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. பி.கோவிந்தன்ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**தீர்மானம் எண்.1336, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.10

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 க்கு உட்பட்ட தெ.புதுக்கோட்டை சாலை சந்திப்பிலிருந்து சுமார் 120 மீட்டர் தூரத்தில் வ.உ.சி பள்ளி உள்ளது. மேற்காணும் பள்ளியில் சுமார் 950 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். மேற்படி பள்ளிக்கு செல்லும் அனுகு சாலை குண்டும் குழியுமாக இருப்பதால் மழை நீர் அதிகமாக தேங்கி நிற்கிறது. இதனால் பள்ளிக்கு செல்லும் மாணவர்கள் நடந்து செல்வதற்கு மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். எனவே அப்பள்ளி மாணவ, மாணவரின் கருத்தில் கொண்டு பள்ளிக்குச் செல்லும் சாலையை புதிதாக அமைத்து கொடுக்கக்கோரி அப்பகுதி வாழ் பொதுமக்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் 21.01.2021 தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | திரு.சுப்பிரமணியன் ஒப்பந்ததாரர் | 0.05% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு |
| 2 | திரு.பி.சசிவர்ணம், ஒப்பந்ததாரர் | 1.48% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம் |

அலுவலகக்குறிப்பு –

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. சுப்பிரமணியன் ஒப்பந்ததாரர்கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.05% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம். மேலும், குடிநீர் பணி அவசரம் அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று உத்தரவு வழங்கி பணி செய்து முடித்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலகக்குறிப்பு

| | |
|---|---|
| | மாணவ, மாணவர்களின் நலன் கருதி மேற்படி சாலையை சீர் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.1337, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.11 | மாநிலத்தில் பசுமை சூழலை அதிகரிக்கும் வகையில், மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதியில் பயன்பாடுயின்றி உள்ள திறந்தவெளி நிலங்களில் மியாவாக்கி முறையில் குறைந்த இடத்தில் அதிக எண்ணிக்கையிலான மரங்கள் நடப்படும் என சட்டமன்றத்தில் விதி எண்.110ன் கீழ் அறிவிப்பினை வெளியிடப்பட்டதை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் நக.எண்.15081/2018/டிபி3 நாள் 18.07.2020 கடிதத்தின் படி பரமக்குடி நகராட்சி பகுதியில் இரண்டு இடங்களில் மியாவாக்கி முறையில் மரங்கள் அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்களில் Cut Stone Fencing , முள்வேலி அமைத்தல் மற்றும் குடிநீர் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.4.90இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.1338, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.12 | ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2018–19, 2019–20 மற்றும் தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைக் கடிதம் ந.க.எண்.26888/UGS3/2/2018 நாள் 15.11.2018ல் பரமக்குடி நகராட்சி பகுதியில் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு ரூ.565.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து உரிய விதிகளின்படி, ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு 22.01.2017ல் மேற்காணும் பணிக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் தற்போது முடிவுறும் தருவாயில் உள்ளது. மேற்படி கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள மண்ணின் தன்மைக்கேற்றவாறு Pile Foundation கூடுதலாக அமைக்கப்பட்டதால் மேற்படி வளாகத்தில் சிமிண்ட் சாலைகள் அமைக்க போதுமான நிதியில்லை. எனவே மேற்படி வளாகத்தில் சிமிண்ட் சாலைகள் உடனடியாக பொது நிதி மூலம் மேற்கொண்டு கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வர நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்கள் நேரடியாகவும், ஆய்வுக்கூட்டத்திலும் அறிவுறுத்தியதைத் தொடர்ந்து மேற்படி வளாகத்தில் கீழ்க்கண்ட விபரப்படி சிமிண்ட் சாலைகள் அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.36.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| 1. | கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் மேற்கு நுழைவு வாயில் சாலையில் சிமிண்ட் சாலை அமைக்கும் பணி | 9.90 |
| 2. | ‘கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் கிழக்கு நுழைவு வாயில் சாலையில் சிமிண்ட் சாலை அமைக்கும் பணி | 9.90 |
| 3. | கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் வடக்கு நுழைவு வாயில் சாலையில் சிமிண்ட் சாலை அமைக்கும் பணி | 9.80 |
| 4. | கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் தெற்கு நுழைவு வாயில் சாலையில் சிமிண்ட் சாலை அமைக்கும் பணி | 6.70 |
| | மொத்தம் | 36.30 |

**அலுவலகக்குறிப்பு –**

மன்றம் அனுமதிக்கலாம்,

| | |
|---|---|
| | மேற்படி கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு இப்பணிகளை நகராட்சி வருவாய் நிதி மூலம் மேற்கொள்ளலாம்.<br><br>**தீர்மானம் எண்.1339, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.13 | வடகிழக்கு பருவமழையின் காரணமாக நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1க்குட்பட்ட தர்மராஜபுரம் காமாட்சி நகர் பகுதியில் சாலைகளில் மழைநீர் அதிகமாக தேங்கி குளம் போல மாறிவிட்டது. சாலை முழுவதும் குண்டும் குழியுமாக உள்ளதால் அப்பகுதி மக்கள் நடந்து செல்வதற்கே மிகவும் சிரமப்படுகின்றனர். அப்பகுதி பொதுமக்கள் மேற்காணும் பகுதியை ஆய்வு செய்து ஆணையாளர் அவர்களிடம் சாலை வசதி அமைத்து தருமாறு கோரியதைத் தொடர்ந்து மேற்காணும் தாமராஜபுரம் காமாட்சி நகர் பகுதியில் தார்சாலை பேவர் இயந்திரம் மூலம் அமைக்க தயார் செய்யப்பட்ட தஉத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 லட்சத்திற்கு மன்றத்தின் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.1340, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.14 | இந்நகராட்சிக்கு சொந்தமான உரப்புளி புல்பண்ணை வளாகத்தில் தூய்மை இந்தியா திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2018-19-;ன் கீழ் ரூபாய் **565.00** இலட்சத்திற்க்கு கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டப்பட்டு வருகிறது. மேற்படி பணி முடியும் தருவாயில் உள்ளது. மேற்படி வளாகத்தில் உள்ள (Sludge Drying bed)கசடு உலர்த்தும் படுகை கூடாரத்தில் வடக்கு மற்றும் தெற்கு பகுதியில் தேங்கும் மழை நீரால் அப்பகுதி சேறும் சகதியுமாக உள்ளது. இதனால் மேற்படி Sludge Drying bed க்கு செல்வது மிகவும் சிரமமாக உள்ளது. எனவே மேற்கண்ட பகுதிகளில் சிமிண்ட் கான்கீரீட் பிளாட்பாரம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.1341, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.15 | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள தலைமை நீரேற்று நிலையங்கள் மற்றும் இதர நீரேற்று நிலையங்களில் உள்ள மின் மோட்டார்கள் மூலம் குடிநீர் நீரேற்றம் செய்து அன்றாடம் பொது மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு நீரேற்றம் செய்யும் போது மோட்டார்களில் அடிக்கடி பழுது ஏற்படுகிறது. இனதால் பொது மக்களுக்கு தினசரி குடிநீர் வழங்குவதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே பொதுமக்களின் குடிநீர் விநியோக அவசியம் கருதி நீரேற்று நிலையங்களில் உள்ள மின் மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்யவும் மற்றும் இதர பிரதான குழாய்கள் மற்றும் மின் சாதனங்களில் ஏற்படும் பழுதுகளை அவ்வவ்போது உடனடியாக சீர் செய்தால் தான் சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலும். எனவே மேற்கண்ட பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.5.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு –**<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் இப்பணிக்கான செலவினத்தினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.1342, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.16 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பகிர்மானக்குழாய்களின் மூலம் தெருக்களில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பல இடங்களில் பகிர்மானக்குழாய்கள் இல்லாமல் உள்ளது. இதனால் அங்குள்ள வீடுகளுக்கு நீண்ட துாரத்தில் உள்ள பகிர்மானக்குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் நகராட்சிக்குட்பட்ட விரிவாக்க பகுதிகளில் பகிர்மான குழாய்கள் இல்லாததால் அப்பகுதியில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்க முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே பொது மக்களின் நலன் கருதியும் மற்றும் குடிநீர் அவசியம் கருதியும் வார்டு எண் 19 முதல் 36 வரை உள்ள பகுதிகளில் |

| | |
|---|---|
| | புதிதாக பகிர்மானக்குழாய் பதிக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு –**<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் இப்பணிக்கான செலவினத்தினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.1343, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.17 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பகிர்மானக்குழாய்களின் மூலம் தெருக்களில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பல இடங்களில் பகிர்மானக்குழாய்கள் இல்லாமல் உள்ளது. இதனால் அங்குள்ள வீடுகளுக்கு நீண்ட துாரத்தில் உள்ள பகிர்மானக்குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் நகராட்சிக்குட்பட்ட விரிவாக்க பகுதிகளில் பகிர்மான குழாய்கள் இல்லாததால் அப்பகுதியில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்க முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே பொது மக்களின் நலன் கருதியும் மற்றும் குடிநீர் அவசியம் கருதியும் வார்டு எண் 1 முதல் 18 வரை உள்ள பகுதிகளில் புதிதாக பகிர்மானக்குழாய் பதிக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு –**<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் இப்பணிக்கான செலவினத்தினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.1344, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.18 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளிலும் சுமார் 165 எண்ணம் சிறு மின்விசைப் பம்புடன் கூடிய சின்டெக்ஸ் தொட்டிகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் பொதுமக்களின் அன்றாட மற்றும் அதிக அளவு குடிநீர் பயன்பாடு மற்றும் கால நிலைக்கு ஏற்ப சிறு மின்விசை பம்புகளில் அவ்வப்போது ஏற்படும் மோட்டார் பழுது, பேனல் போர்டு பழுதுகள், சின்டெக்ஸ் தொட்டி பழுது உள்ளீட்ட ஏனைய பழுதுகளை சரி செய்ய வேண்டிய சூழ்நிலையில் உள்ளது. எனவே பொதுமக்களின் குடிநீர் விநியோக அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு 1 முதல் 18 வார்டுகளில் உள்ள சிறு மின்விசைப் பம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு –**<br>மன்றம் அனுமதிக்கலாம், மேற்படி பணியினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.1345, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.19 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளிலும் சுமார் 165 எண்ணம் சிறு மின்விசைப் பம்புடன் கூடிய சின்டெக்ஸ் தொட்டிகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் பொதுமக்களின் அன்றாட மற்றும் அதிக அளவு குடிநீர் பயன்பாடு மற்றும் கால நிலைக்கு ஏற்ப சிறு மின்விசை பம்புகளில் அவ்வப்போது ஏற்படும் மோட்டார் பழுது, பேனல் போர்டு பழுதுகள், சின்டெக்ஸ் தொட்டி பழுது உள்ளீட்ட ஏனைய பழுதுகளை சரி செய்ய வேண்டிய சூழ்நிலையில் உள்ளது. எனவே பொதுமக்களின் குடிநீர் விநியோக அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு 19 முதல் 36 வார்டுகளில் உள்ள சிறு மின்விசைப் பம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு –**<br>மன்றம் அனுமதிக்கலாம், மேற்படி பணியினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.1346, அனுமதிக்கப்பட்டது.** |

தனிஅலுவலர்
பரமக்குடி நகராட்சி